# திராவிடர் - திராவிடம் பற்றி இனமானப் பேராசிரியர்!



திராவிடர் - திராவிடம் பற்றிப் புரியாதவர்களுக்கும், அறியாதவர்களுக்கும், வாய் நீளம் காட்டும் அரசியல் அரை வேக்காடுகளுக்கும், நமது இனமானப் பேராசிரியர் அவர்கள் தந்திருக்கும் அருமையான விளக்கம் இதோ :

உண்மையாகவே நாம் 'தமிழர்' என்று சொல்லும்பொழுது நமக்குக் கிடைக்காத உரிமையும், பெருமையும் 'திராவிடர்' என்று சொல்லுகிறபொழுது நமக்குக் கிடைக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அந்தக் காலத்திலே தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சேர்ந்து நீதிக்கட்சியின் பெயரை 'திராவிடர் கழகம்' என்று மாற்றி அமைத்த பொழுது, சில பேராசிரியர்கள் கூட என்னிடத்திலே கேட்டார்கள்.

"எதற்காகத் தமிழ்நாட்டில் தமிழர்களாகிய நாம், திராவிடர் கழகம் என்று பெயர் வைக்க வேண்டும்? தமிழர் என்னும் பெயருடன் கழகம் இருக்கக் கூடாதா?" என்று கேட்டார்கள்.

நான் அவர்களுக்கெல்லாம் சொன்ன விளக்கம் இதுதான் : - "பார்ப்பனரை விலக்காத பெயர் 'தமிழன்'; பார்ப்பனரை விலக்கிய பெயர் 'திராவிடன்' " என்பதுதான்.

பார்ப்பனரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகவே தொடங்கப்பட்ட இயக்கம்தான் நீதிக்கட்சி. பார்ப்பனர்களுடைய ஜாதி அடிப்படையிலான வைதிக ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகப் பிறந்த இயக்கம்தான் சுய மரியாதை இயக்கம். ஆக இரண்டு குறிக்கோளும் சேர்ந்ததுதான் திராவிடர் கழகத்தின் இலட்சியம். அதை அரசியல் மூலம், சட்டத்தின் மூலம் நிலை நாட்டுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

எனவே, அந்த அடிப்படையிலே "தமிழர்" என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்; "திராவிடர்"என்பதால் நான் உரிமை பெறுகிறேன்; என்று நான் அவர்களிடத்திலே சொன்னேன்.

அக்காலத்தில் சமயச் சார்புள்ள பெரியவர்களிடமெல்லாம் நான் பழகக் கூடிய வாய்ப்புப் பெற்றிருந்த காரணத்தால், அவர்கள் "எதற்கு இந்தத் 'திராவிடர்'? ஆதிதிராவிடரோடு உங்களைச் சேர்த்து வைத்துக் கொள்வதிலே என்ன பெருமை உங்களுக்கு?" என்று கேட்பார்கள்.

நான் அவர்களுக்குச் சொன்ன பதில்: ஆதிதிராவிடன்தான் இந்த நாட்டின் முதல் தொல்குடிமகன். அவர்களுடன் சேர்ந்தால்தான் திராவிடர்களுடைய இனவுரிமையும் பாதுகாக்கப்படும் என்று பதில் சொன்னேன். மனிதத் தன்மையைக் காப்பாற்றவும், அதுதான் வழி - தீண்டாமையை ஒழிக்கவும் அதுதான் வழி - வரலாற்று மறுமலர்ச்சிக்கும் அதுதான் வழி என்று அன்றைக்கு விளக்கம் சொன்னேன்" என்றார்.

**நன்றி : "விடுதலை" 14.11.2024**

துணை முதல்வரின் சீரிய தலைமையில் - தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்

# பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் வெற்றிகரமான செயல்பாடுகள்!

## ஏழை, எளிய மக்கள் பொருளாதார அளவில் மேம்பாடு அடைகின்றனர்!

சென்னை, நவ. 21-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் இயங்கி வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புற ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமையையும், நலிவு நிலையையும் குறைத்து, சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத் தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் குறைந்த பட்சம் 1020 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து பகுதி மற்றும் வார்டு அளவில் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஏழை எளிய மக்களின் அமைப்பாக நகர்ப்புறங்களில் செயல்பட்டு வரும் ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பும் முறையான வட்டி விகித்தில் உடனடியாக கடன் பெற வழிவகை செய்தல், சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளின் சுய உதவிக் குழுக்களுக்கு வழிகாட்டியாக உள்ளதுடன், கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள குழுக்களுக்கு பல்வேறு அரசு திட்டங்களின் பயன்கள் மற்றும் மானிய உதவிகளை பெறவும் வழிகாட்டுகிறது.

1.5.2021 முதல் 30.10.2024 வரை 2,538 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 6 மாதங்கள் சிறப்பாக செயல்பட்ட, பதிவு பெற்ற வெற்றிகரமாக மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் சுழல் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த சுழல் நிதியானது தேவையின் அடிப்படையில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கப்படும். இதுவரை 1,415 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.7.07 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள குழுக்களின் கடன் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு பகுதி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வங்கியில் 317 திட்ட முன்வரைவுகள் சமர்ப்பிக்கப்பட்டு இதுவரை 277.97 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் 3,145 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு, 1,929 பள்ளிகளில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 1,11,979 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தான உணவை சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உறுதி செய்கிறார்கள்.

சிறு, குறு உணவு உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தின் மூலம் பகுதி அளவிலான கூட்டமைப்பை சார்ந்த 7,019 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.27.08 கோடி ரூபாய் மூலதன ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் தாங்கள் மேற்கொண்டு வரும் தொழிலினை வலுப்படுத்தி கூடுதல் வருமானத்தை ஈட்டி வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு அரசு திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் ஏழை எளிய மக்கள் பயன்பெற்று சமூக மற்றும் பொருளாதார அளவில் மேம்பாடு அடைந்து வருகின்றனர்.



பெரம்பலூர் மாவட்டம் துறைமங்கலம் குழந்தைகள் நல மையத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணிகள் துறையின் சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் "ஊட்டச்சத்தை உறுதி செய் இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார் . இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை 11 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 4, 7 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 21/11/2024 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | 4 | பாப்பிரெட்டிப்பட்டி | மணி மஹால், பொம்மிடி, தருமபுரி. |
| | காலை 9.00 மணி | 7 | கும்பகோணம் | ராயாஸ் கிராண்ட், முதல் தளம், மகாமக குளம் எதிரில், கும்பகோணம். |
| | மாலை 4.00 மணி | | திருவிடைமருதூர் | கலைஞர் பாசறை, பிரதான சாலை, திருவிடைமருதூர். |
| 22/11/2024 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | 4 | பாலக்கோடு | பி.எம்.குப்புசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், பெரியாம்பட்டி, தருமபுரி. |
| | மதியம் 2.30 மணி | | அரூர் | கொங்கு வேளாளர் திருமண மண்டபம், அரூர், தருமபுரி. |
| 23/11/2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 7 | வேதாரண்யம் | சிம்பு மீரா திருமண மஹால், நாகை சாலை, வேதாரண்யம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

நெல்லை மாநகர

# வழக்கறிஞர் அணிக் கூட்டம்!

## சு.சுப்பிரமணியன் தலைமை!

நெல்லை, நவ. 21-

நெல்லை மாநகர தி.மு.க அலுவலகத்தில் மாநகர வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் மாநகர செயலாளர் சு.சுப்ரமணியன் தலைமையில் துணைச் செயலாளர் அப்துல் கையூம், பகுதிச் செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) மாநகர வழக்கறிஞரணி அமைப்பாளர் சுரேஷ்குமார், வழக்கறிஞரணி தலைவர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும், நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு அறிவுறுத்தலின்படியும், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆலோசனை யின்படி நெல்லை மாநகர தி.மு.க. வழக்கறிஞர் அணி அவசர ஆலோசனை கூட்டம் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்று.

இந்நிகழ்வில் மாநகர வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக் தம்பான்,சண்முக சுந்தர், சங்கர் கணேஷ், மாவட்டப் பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், வட்டச் செயலாளர் கேபிள் குமரேசன், வழக்கறிஞர்கள் ஜெயபிரபா, செந்தில், பரமசிவன், தாமிரா கணேசன், பீர்ஷா, அம்பேத் பிரபாகரன், புலித்துரை, மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் அந்தோணிராஜ், பீர்ஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் வழக்கறிஞர் சுபாஷ் நன்றியுரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

1.2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் வழங்கப்படும் பணிகளை உடனடியாக மேற்கொள்வது.

2.2026 சட்டமன்றத் தேர்தலைப் முன்னிட்டு மற்ற மாவட்டங்களில் பாக முகவர்களின் பணிகளை ஆய்வு செய்ய,செய்வதற்காக தயார் நிலையில் அணி நிர்வாகிகளை ஒருங்கிணைப்பது.

3.துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்து, அவர்களின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவது என்றும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; 16 – ஆவது நிதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளும், தமிழ்நாட்டுக்கான நிதியை 50 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனரே?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; "நியாயம், நியாயம் என்ற காரணத்தினாலே மட்டும் வெற்றி பெற்றுவிடாது; நியாயத்தின் பக்கம் வலிமை சேர வேண்டும்" - என்றார் பேரறிஞர் அண்ணா.**

**நமது முதல்வரின் கோரிக்கைக்குத் தேவையான வலிமை சேர்ந்திருக்கிறது. நிதிக்குழு, தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்குத் திரண்டுள்ள வலிமையை எண்ணிப் பார்த்து, நியாயமாக நடந்து கொள்ளும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்பாக உள்ளது!**